*S.*டேனியல் சம்பத் குமார்
எண் 147, திருநிலை காலனி,
விச்சூர் போஸ்ட்,
சென்னை – 600 103




*for books contact :*

**S.DANIEL SAMPATH KUMAR**
*No. 147, Thirunilai colony ,*
*vichoor post , chennai - 600 103*
*E-Mail : sdanielsampathkumar@gmail.com*
*Website : danielendtimebooksministry.org*
*Phone No :* 99419 74213 , 96001 71260

TAMIL

# *The Spoken Word*

*by*

*WILLIAM MARRION BRANHAM*

# ஒவ்வொரு காலத்திலும் பரிசுத்த ஆவியானவர்

**THE HOLY GHOST IN EVERY AGE**

**ஏழாம் தூதன்**

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

**“உரைக்கப்பட்ட வார்த்தையே மூல வித்து”**

# ஒவ்வொரு காலத்திலும் பரிசுத்த ஆவியானவர்

## THE HOLY GHOST IN EVERY AGE

**வெளி.2:11** ''ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன்''. இந்த வசனம் குறிப்பிடப்படாத எந்த ஒரு சபைக்காலமும் இல்லை. ஒவ்வொரு குறிப்பிட்ட காலமும், அதே கண்டித்துக் கூறலை ஒவ்வொரு காலத்தின் மக்களுக்கு கொண்டிருக்கிறது. ''ஆவியானவர் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.'' ஆவியானவர் ஒவ்வொரு காலங்களுக்கும் கூறுவதை எல்லா மனிதரும் கேட்டு அறிந்து கொள்ளவே முடியாது. ''அப்படியிருந்தும் தேறினவர்களுக் குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம். இப்பிரபஞ்சத்தின் ஞானத்தை யல்ல, அழிந்து போகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் ஞானத்தை யல்ல, உலகத்தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவ ஞானத்தையே பேசுகிறோம். அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார் களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறைய

மாட்டார்களே. எழுதியிருக்கிறபடி தேவன தமமல அனபு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை. நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறிய மாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப் படுத்திக் காண்பிக்கிறோம். ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது.'' *(1கொரி.2:6-16)*

''அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்து கொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால், நான் உவமைகளாக அவர்களோடே பேசுகிறேன். ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறுகிறது; அதாவது, காதாரக் கேட்டும் உணராதிருப்பீர்கள்; கண்ணாரக் கண்டும் அறியாதிருப்பீர்கள். இந்த ஜனங்கள் கண்களினால்

புத்தகங்களனைத்தும் கூறுகின்றன. இழந்து போன அவருடைய ஆதரவைப் பெற ஒரே பரிகாரமுண்டு. நீங்கள் வார்த்தைக்கு திரும்ப வரவேண்டும்.

எபேசு சபையின் காலத்தையும், இந்தக் காலத்தையும் ஒவ்வொரு சபையின் காலத்தையும் நாம் ஆராயும்போது, இது உண்மையென விளங்கும், நாம் வாழும் இக்கடைசிக் காலத்தில் தேவனுடைய வார்த்தை முழுவதும் அந்தகாரப்பட்டு, மக்கள் நிலைதவறி, முடிவில் உபத்திரவக் காலத்தில் பங்கு கொள்வர் என்பதை நாமறியலாம்.

நீங்கள் உண்மையான வித்தாக இருந்தால், நீங்கள் உண்மையாகப் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றிருந்தால், எல்லாவற்றைக் காட்டிலும் தேவனுடைய வார்த்தையை அதிகம் மதித்து, அவருடைய வாயிலிருந்து புறப்படுகிற **ஒவ்வொரு வார்த்தையினாலும் நீங்கள் பிழைப்பீர்கள்**.

நம்மெல்லாருக்காகவும் இது என்னுடைய உத்தமமான ஜெபமாகும்; இன்றைக்கு ஆவியானவர் வார்த்தையிலிருந்து நமக்கு கொண்டு வருவதை நாம் கேட்போமாக.



காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாகக் கேட்டு, தங்கள் கண்களை மூடிக் கொண்டார்கள் என்பதே. உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ளவைகள்'' *(மத். 13:13-16)*. ''இயேசு அவர்களை நோக்கி; தேவன் உங்கள் பிதாவாயிருந்தால் என்னிடத்தில் அன்பாயிருப்பீர்கள். ஏனெனில் நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறேன்; நான் சுயமாய் வரவில்லை. அவரே என்னை அனுப்பினார். என் வசனத்தை நீங்கள் ஏன் அறியாமலிருக்கிறீர்கள்? என் உபதேசத்தைக் கேட்க மனதில்லாதிருக்கிறதினால் அல்லவா? நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலை நிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்.'' *(யோவான் 8:42-44)*.

தேவனுடைய வார்த்தைகளுக்குச் செவி கொடுக்கும் திறமையை தேவனே கொடுத்தாலன்றி, எந்த மனிதனும் அவனாகவே அவைகளுக்குச் செவி கொடுக்க முடியாது என்பதை மேற்கூறிய வசனங்களின் வாயிலாக அறியலாம். ''இயேசு அவனை நோக்கி; யோனாவின் குமாரனாகிய சீமோனே நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்'' *(மத்.16:17)*. இவ்வசனங்களை ஒன்று சேர்த்து பார்த்தால் ஒரே ஒரு ஜனக்கூட்டம் மாத்திரமே, ஒரு மிக விசேஷித்த ஜனக்கூட்டம் மாத்திரமே ஒவ்வொரு காலத்திலும் ஆவியானவர்

கூறுவதை கேட்க முடிந்தவர்களாக இருக்கின்றனர் என்பதை நாம் காணலாம். ஒவ்வொரு காலத்திலும் வெளிப்பாட்டை ஒரு விசேஷித்த குழு மாத்திரமே பெற்றுக் கொள்கிறது. அந்த குழுவினர் தேவனாலுண்டானவர்கள், ஏனெனில் செவிகொடுக்க முடியாதவன் தேவனாலுண்டானவன் அல்ல (யோவான் 8: 42-44). ஆவியானவர் என்ன கூறுகின்றார் என்பதைக் கேட்க முடிந்திருக் கின்ற அந்த குழுவானது வெளிப்பாட்டை பெற்றுக்கொள்கிறது. அந்த குழு 1கொரி. 2:6-16ல் விவரிக்கப்படுகின்றது. அவர்கள்தான் தேவனால் பிறந்தவர்கள். அவர்கள்தான் தேவனுடைய ஆவியை உடையவர் ஆவர். அவர்கள் அவருடைய ஆவியால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்தவின் சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பண்ணப்படு கிறார்கள். அவர்கள் பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் பண்ணப் படுகிறார்கள்.

நாம் இப்பொழுது கூறியவைகளை மேலும் தெளிவாக்க, மேலும் பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டவர்கள் யார் என்பதைக் குறித்து நாம் பேசுகையில் மனதில் கொண்டிருக் கத்தக்கதாக ஒரு வேதவசனத்தை உபயோகப்படுத்தவும், இயேசு யோவான் 6:45ல் என்ன கூறுகிறார் என்பதையும் காண்போம். ''**எல்லாரும்** தேவனால் போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதப்பட்டிருக்கிறதே'' ஆனால் ஏசாயா தீர்க்கதரிசி, ''உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக் கப்பட்டிருப்பார்கள்'' (ஏசா-54:13) என்று உரைக்கிறான். **தேவனு டைய எல்லாரும்**' என்ற பதம் **தேவனுடைய பிள்ளைகளைக்** குறிக்கிறது. ஆதலால் ஒரு உண்மையான தேவனுடைய பிள்ளை என்பதின் அடையாளமானது, (அவன் மீது ஆவியானவர் வந்து அவனுக்குள் வாசம் செய்கிறார்) ஒருவன் பரிசுத்த ஆவியால் வார்த்தையை போதிக்கும் போது மறுபடியுமாக கொணரப்படுகிறதே ஆகும்.



கொடுக்கப்பட்டதோ அதைக் கூறுவது அவ்வளவு முக்கியம் வாய்ந்ததாகும். ஆவியானவரின் சத்தத்தை மாத்திரம் நாம் கேட்கக் கவனமுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

அதை நீங்கள் இப்பொழுது காணத்துவங்குகிறீர்கள் என்று நான் நம்புகிறேன். இப்பொழுது நான் அடிப்படைவாதிகளுடனும் பெந்தெகொஸ்தேயினருடனும் நான் சேராதிருப்பது ஏன் என்று ஒருக்கால் உங்களால் புரிந்துக்கொள்ளமுடியும். கர்த்தர் வெளிப் படுத்தியுள்ள விதத்தில்தான் நான் வார்த்தையை பிடித்துக் கொண்டிருக்க வேண்டியவனாக உள்ளேன். நான் அதை முழுமை யாகவே எடுத்துரைக்கவில்லை. அதற்கு ஒரு தனி புத்தகமே தேவைப்படும், ஆனால் கர்த்தருடைய ஒத்தாசையால் நீங்கள் புரிந்து கொண்ட எல்லா வேதவசனத்தையும் இணைத்து பார்க்க உதவி செய்யும் அநேக பிரசங்கங்களையும் ஒலிநாடாக்களையும் நாம் பெற்றுக் கொள்வோம்.

''ஆவியானவர் ஒவ்வொரு காலத்தின் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.'' ஒவ்வொரு காலத்திலும் இது அதேவிதமான ஒரு உரைத்தலாக இருந்தது. ஆவியானவர் கூறுவதைக் கேளுங்கள். நீங்கள் கிறிஸ்தவர்களா யிருந்தால் ஆவியானவர் போதிப்பதை ஏற்றுக் கொள்வீர்கள். அதாவது, அந்த காலத்தின் வார்த்தையாகும். அந்தந்த காலத்திற்குரிய செய்தியாளன் இந்த வார்ததையை போதிப்பான். மக்கள் அந்த காலத்திற்குரிய வார்த்தைக்கு திரும்பச் சென்றதால் ஒவ்வொரு புதிய, உண்மையான எழுப்புதல் வரும். ஒவ்வொரு காலத்திலும் ஆவியானவர், ''நீங்கள் தேவனுடைய வசனத்தைப் புறக்கணித்தீர்கள், மனந்திரும்பி, சத்தியத்தை ஏற்றுக் கொள்ளுங் கள்'' என்று கடிந்து கொள்கிறார். வசனத்தைப் புறக்கணித்தலே தேவனுடைய வருத்தத்தின் காரணமென்று ஆதியாகமம் தொடங்கி வெளிப்படுத்தின விசேஷம் முடியவுள்ள வேதத்தின்

தேவனுடைய பிள்ளைகள் ஆவியானவர் கூறுவதை ஏற்றுக்கொள் வார்களென்பதை அறிந்து, அங்கு போக ஆவியானவரால் ஏவப்பட்டான்.

ஒவ்வொரு சபையின் காலத்திலும் இதே சம்பவம் நிகழ் கிறது. ஒரு ஸ்தலத்தில் வாழும் தூதன், அக்காலத்துக்குரிய சத்தியத் தைப் பெறுகிறான். அந்த செயதியாளனிலிருந்து வெளிச்சம், இச்செய்தியானது உண்மையாய் போதிக்கப்பட்ட ஊழியக்காரரின் ஊழியத்தின் மூலம் பரவுகின்றது. சத்தியத்தை பரப்புகிறவர்கள் சில சமயம் செய்தியாளன் போதித்துக் கொடுத்ததை **மாத்திரம்** போதிக்காமல், சிலவற்றைக் கூட்டியும் குறைத்தும் போதிப்ப தால், சத்தியம் கறைபட்டு, அதன் காரணமாக எழுப்புதல் உண்டாகிறதில்லை. பவுல், தான் கூறியதை மாத்திரம் போதிக்க ஊழியர்களுக்குக் கட்டளையிடுகிறான். ''ஒருவன் தன்னைத் தீர்க்கதரிசியென்றாவது, ஆவியைப் பெற்றவனென்றாவது எண்ணினால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் **கர்த்தருடைய கற்பனைகளென்று** அவன் ஒத்துக்கொள்ளக்கடவன். தேவ வசனம் உங்களிடத்திலிருந்தா வந்தது?'' *(1கொரி 14:37)* அவர்கள் இங்கே கொஞ்சம் சேர்த்துக் கொள்கின்றனர் அல்லது எடுத்துவிடு கின்றனர், விரைவில் அந்த செய்தி தூய்மையானதாக இருக்காது, எழுப்புதல் மரித்துப் போகின்றது. அந்த **ஒரேயொரு** சத்தத்தைக் கேட்க எவ்வளவு கவனமுள்ளவர்களாக நாம் இருக்க வேண்டும், ஏனெனில் ஆவியானவர் ஒரோயொரு சத்தத்தைத்தான் கொண்டி ருக்கின்றார். அது தேவனுடைய சத்தமாகும். அவன் கூறினதை மாத்திரமே கூறவேண்டுமென்று பவுல் கூறினான், பேதுருவும் அதே விதமாகத்தான் செய்தான். வெளிப்பாட்டின் மூலமாக அவன் என்ன கூறினானோ அந்த வார்த்தையில் ஒன்றைக் கூட **அவனாலும் கூட (பவுல்)** மாற்ற முடியாது என்று அவர்களை எச்சரித்தான். ஓ, தேவனுடைய சத்தத்தை அவருடைய செய்தியாளர்கள் மூலமாகக் கேட்டு, பிறகு சபைகளுக்கு கூறத்தக்கதாக அவர்களுக்கு என்ன


பரிசுத்த ஆவியால் அபிஷேகிக்கப்பட்டிருப்பதின் அடை யாளமாக அந்நிய பாஷையில் பேசுதல் ஏன் இல்லையென்று இப் பொழுது உங்களால்காண ஏதுவாகயிருக்கின்றது. ஆவியானவர் எந்த ஒரு சபையின் காலத்திலும் ''ஆவியானவர் சொல்லுகிறதை நாவுள்ளவன் சொல்லக்கடவன்'' என்று கூறினதேயில்லை. அது அந்நியபாஷை, பாஷைவியாக்கியானப்படுத்துதல், தீர்க்கதரி சனம், மற்றும் இதரரகசியங்கள் இவைகளை அடையாளமாகக் குறிக்காமல் அது இவைகளைப் புறம்பாக்குகிறது. அடையாளம் என்னவென்றால், ஆவியானவர் கூறுவதைக் **கேட்பதே** ஆகும். ஆவி யானவர் பேசுகின்றார். ஆம், ஆவியானவர் போதிக்கின்றார். அவர் வரும் போது என்ன செய்வார் என்று சரியாக அதைத்தான் இயேசு கூறினார். ''அவர் எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப் பூட்டுவார்'' *(யோவான் 14:26)*. அவர் சொன்னது நிறைவேறியது. சுவிசேஷங்கள் அவ்விதமாகத்தான் எழுதப்பட்டன, இயேசு பேசின அதே வார்த்தைகளை இந்த மனிதரின் சிந்தைகளுக்கு பரிசுத்த ஆவியானவரால் திரும்பவுமாக நினைவூட்டப்பட்டது. அதன் காரணமாகத்தான் சுவிசேஷங்கள் துல்லியமாக இருக் கின்றன. அவைகள் பரிபூரணமாக இருக்கின்றன. ஆனால் பரிசுத்த ஆவியானவர் எல்லா காரியங்களையும் அவர்களுடைய மனதிற்கு கொண்டு வந்தது மாத்திரமல்லாமல், அவர்கள் ஏற்கனவே கொண்டிருந்த சத்தியத்தின் பேரில் இன்னுமாக அவர்களுக்கு போதித்தது. அந்த விதமாகத்தான் பவுல் தன்னுடைய வெளிப் பாடுகளை பெற்றுக் கொண்டான். அவன் அதைக் குறித்துக் கூறினான். 'மேலும் சகோதரரே, என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷனுடைய யோசனையின்படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான் அதை ஒரு மனுஷனால் கற்றதுமில்லை, இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப் படுத்தினார்'' *(கலா.1:11-12)*. அவன், பரிசுத்த ஆவியினால் போதிக்கப்பட்டான்.

ஒரு நாள் இயேசு பூமியின் மீது இருந்தபோது ஒரு குறிப்பிட்ட முக்கியம்வாயந்த ஒரு மனிதன் அவரை சந்திக்க வந்தான். இந்த மனிதன் ''ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம்'' என்றுரைத்தான். ஆனால் இயேசு அவன் பேச்சைப் பாதியிலேயே நிறுத்தி விட்டார் என்பதை நீங்கள் காணலாம். அவர் நிக்கோதேமுவிடம் திரும்பி அவர் கூறின வார்த்தைகளை இவ்விதமாக சுருக்கிக் கூறலாம். ''நான் ஒரு போதகன் **அல்ல**, நான் பாவத்திற்கென்று பலி செலுத்தப்படும் ஆட்டுக்குட்டி. என்னுடைய ஆவியினால் புதிய பிறப்பானது நீகழக்கூடிய ஒன்றாக செய்துக்கொண்டிருக்கிறேன். ஆனால் இனி வருபவர் போதகராயிருப்பார். அவர்தான் பரிசுத்த ஆவி.'' இயேசு இவ்வுலகத்திலிருந்தபோது அவர் அந்த ஆட்டுக்குட்டியானவராகவும் அந்த தீர்க்கதரிசியாகவும் வந்தார். ஆனால் அவர் சபையின் மீது திரும்பவுமாக வந்த போது அவருடைய ஆவியினால் அவர் அந்த போதகராக ஆனார்.

ஆகவே ஒவ்வொரு காலத்திலும் அதே சத்தியத்தைத்தான் நாம் கேட்கின்றோம். ''ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்'' ஆனால் ஆவியினால் நிரப்பப்பட்டிருக்கின்ற ஒரு மனிதனால் மாத்திரமே அந்த காலத்திற்குரிய வெளிப்பாட்டினைக் கேட்கமுடியும். மற்ற ஒருவராலும் முடியாது. இல்லை ஐயா. அவர்களால் முடியாது. ஏனென்றால் அது பவுல் 1 கொரி 2:6-16ல் கூறிவாரே சரியாக உள்ளது.

இது உங்களை களிகூறச் செய்ய வேண்டியதாகயிருக்கிறது. கடுமையான உணர்வுகளையும் அதிக தவறாக புரிந்துகொள்ளுதலையும் பிறப்பிக்கின்ற ஒரு மிக விநோதமான ஒரு போதகம் இருக்கின்றது. ஏனெனில் பெந்தெகொஸ்தேயினர் நீங்கள் அந்நிய பாஷையில் **பேசித்தான ஆக** வேண்டும் அல்லவென்றால் நீங்கள் பரிசுத்த ஆவியால் அபிஷேகிக்கப்படவில்லை என்று கூறுகின்றனர்.



காலத்திலும் தாமே அந்த காலத்திற்கென்று சம்பந்தப்பட்டிருக்கின்ற **ஒரேயொரு** நபருக்குத்தான் கூறுகின்றார். ஒவ்வொரு காலத்திற்கும் **ஒரேயொரு** செய்தியாளன் மாத்திரமே அந்த காலத்திற்கென்று ஆவியானவர் கூற இருப்பதை பெற்றுக் கொள்கிறான். அந்த **ஒரு செய்தியாளன்** தான் உண்மையான சபைக்குச் செய்தியாளன். அவன் உண்மையான மற்றும் போலியான இரண்டு ''சபைகளுக்கும்'' வெளிப்பாட்டின் மூலமாக தேவனுக்காக பேசுகிறான். அந்த செய்தி பிறகு எல்லாருக்கம் அறிவிக்கப்படுகின்றது. செய்தியானது எல்லாருக்கும் அறிவிக்கப்பட்டாலும் அந்தச் செய்தி ஒரு குறிப்பிட்ட தகுதிபெற்ற குழுவினால், ஒரு குறிப்பிட்ட விதத்தில் தனிப்பட்ட நபர்களால் ஏற்றுக் கொள்ளப்படும். அந்த குழுவின் ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் செய்தியாளன் மூலமாக ஆவியானவர் என்ன கூறுகின்றாரோ அதைக் கேட்கத்தக்கதான திறமையைப் பெற்றிருப்பான். இதைக் கேட்கிறவர்கள் தங்கள் சொந்த வெளிப்பாட்டை பெற்றுக் கொள்ள மாட்டனர், அல்ல வென்றால் மொத்த வெளிப்பாட்டைப் பெற்றுக் கொள்கின்ற ஒரு குழு அல்ல. ஆனால் **ஏற்கனவே செய்தியாளன் தேவனிடமிருந்து பெற்றுக் கொண்டுவிட்டதை ஒவ்வொரு நபரும் கேட்டு பெற்றுக் கொள்கின்றனர்.**

இதை விசித்திரமென்று நினைக்காதீர்கள், ஏனெனில் பவுல் தேவனுடைய கரத்தின் கீழிருந்து இந்த மாதிரியை அமைத்தான். அவனுடைய நாளுக்கான முழு வெளிப்பாடையும் பவுல் மாத்திரமே கொண்டிருந்தான். அவன் புறஜாதிக்கென்று நியமிக்கப் பட்ட அந்த நாளிற்குரிய செய்தியாளனும் தீர்க்கதரிசியுமென்று மற்றெல்லா அப்போஸ்தலரும் ஒப்புக்கொள்கின்றனர். அவன் ஆசியாவுக்குப்போக மனதாயிருந்தபோது, அவன் மூலமாய் ஆவியானவர் கூறுவதை ஆசியாவிலுள்ள மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டனர் என்பதை தேவன் அறிந்து, அவன் அங்கு போகாமல் தடை செய்தார். அதே சமயத்தில், மக்கதோனியாவிலுள்ள

விட்டார்' என்று அந்த சத்தம் கூறவில்லை. இயேசு இதற்கு முன்பே **குமாரனுயிருந்தார்.** அவர்கள் எல்லாருக்கும் முன்பாக, பரிசுத்த ஆவியானவர் அவரை அந்த குமாரனுக அமர்த்தினுர் (postioned). பரிசுத்த ஆவியினுல் நிரப்பப்பட்டபிறகு, வல்லமையான கிரியைகளைச் செய்து, அக்காலத்திற்குரிய தேவனுடைய முழு வெளிப்பாட்டை தேவனிடத்திலிருந்து பெற்றுர். பெந்தெகொஸ்தே காலத்திலும், அதைத் தொடர்ந்த காலங்களிலும், இதுவே மாதிரியாக இருக்கின்றது. தேவனுல் தெரிந்து கொள்ளப்பட்ட ஒவ்வொரு விசுவாசியையும், ஆவியானவர் முன்னறிந்து, அவனை நிரப்பி, வல்லமையைக் கொடுத்து, அவன் வாழும் காலத்துக்குரிய வெளிப்பாட்டையும் அளிக்கிருர்.

இப்பொழுது நாம் தொடர்ந்து கூறிக்கொண்டு வருவது என்னவென்றுல் ஒரு விசுவாசிக்கு பரிசுத்த ஆவியினுல் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கின்ற ஒரு உண்மையான அடையாளம் என்னவென்றுல் அவன் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்த காலத்தின் வார்த்தையை பெற்றுக்கொள்வதேயாகும். இதை நான் உங்களுக்குத் தெளிவாகக் காண்பிக்கட்டும்

வெளிப்படுத்தின விசேஷத்தில் அதிகாரங்கள் 2 மற்றம் 3ல் கூறப்பட்ட ஏழு சபைகளின் காலமும், புறஜாதியார் இரட்சிக்கப்பட தேவன் குறித்த காலமாகும். 'புறஜாதியாரின் நிறைவு' என்று இது வேதத்தில் அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு குறிப்பிட்ட ஒவ்வொரு சபை காலத்திலம் அது செய்தியை துவக்கும் போதும் முடிக்கும் போதும் (எபேசு, சிமிர்னு, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா) வின் செய்தியாளனுக்கு எழுது; இந்த காரியங்களை அவர் கூறுகிருர், மற்றது, மற்றது ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்'' (ஒருமை) என்னும் கட்டளையினுல் முடிவுபெறுகிறது. இங்கே கவனியங்கள், இயேசு (ஆவியினுலே) **ஒவ்வொரு** சபைக்



அதனுல் அவர்கள் தேவனுடைய மனிதர்களான நாக்ஸ் (Knox), மூடி (Moody), டெய்லர் (Taylor), கோபோர்த் (Goforth), என்பவர்கள் பரிசுத்த ஆவி பெற்றதை அவர்கள் மறுதலிக்கின்றனர்; அல்லது அவர்கள் அந்தரங்கமாக அந்நியபாஷை பேசி என்ன நடந்து கொண்டிருக்கிறதென்று அறியாதிருந்தனர் என்றும் கூறுகின்றனர். இப்பொழுது அது உண்மையல்ல. இல்லை ஐயா. அது முழு, மொத்த பிழையாகும். அந்நிய பாஷை ஆவியின் நிறைவின் அடையாளமல்ல. 1கொரி. 12ம் அதிகாரம் கூறும் ஆவியின் ஒன்பது வரங்களில் இது ஒன்ருகும். அந்நிய பாஷையைப் பேசிக் கொண்டே பரிசுத்த ஆவியைப் பெற்றதாகவோ அல்லது அந்நிய பாஷையைப் பேசுவதன் மூலம் பரிசுத்த ஆவியைப் பெற்றதாகவோ வேதத்தில் சான்றில்லை. ''அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினுலே நிரப்பப்பட்ட **பிறகு,** வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினுர்கள்'' என்றும், பிறகு தீர்க்கதரிசனம் உரைத்தார்களென்றும் வேதம் தெளிவாகக் கூறுகிறது.

அந்நிய பாஷை பேசும் அனைவரும், உண்மையான ஆவிக்குரிய அந்நியபாஷை பேசுகின்றனர் என்ற எண்ணம் இன்றைக்கு அநேக மக்களிடையே பரவியிருக்கிறது. ஆனுல் அப்படியன்று. ஏனென்றுல் அநேக மக்கள் ஒரு அறியப்படுகின்ற பாஷையில் பேசுகினறனர். ஆனுல் ஒரு தவருன ஆவியின் ஊக்குவித்தலினுலே பேசுகின்றனர். நாம் ஒரு கூட்டத்தில் இருப்பதாக வைத்துக்கொள்வோம். மக்கள் எல்லாரும் அந்நிய பாஷையில் பேசுகின்றனர். எந்த பாஷை ஆவியினுல் உண்டானதென்றும், எது பிசாசினுல் உன்டானது என்றும் நம்மால் எப்படி தெரிந்து கொள்ள முடியும்? மந்திரவாதிகள் மண்டை ஓட்டிலிருக்கும் இரத்தத்தைக் குடித்து, அந்நிய பாஷை பேசி, அதன் அர்த்தத்தை விவரித்து, தீர்க்கதரிசனம் உரைத்த அஞ்ஞானிகளின் மத்தியில் நான் இருந்திருக்கிறேன், கண்டிருக்கிறேன். அவர்கள் அந்நிய பாஷையிலும் எழுதுகின்றனர். இப்பொழுது அந்நியபாஷை

பேசுதல் பரிசுத்த ஆவியைப் பெற்றதன் அந்த அடையாள மாயிருப்பின், ஒவ்வொரு அந்நியபாஷையும் தேவனுல் உண்டா யிருக்க வேண்டும். ஆனுல், தவருன அந்நிய பாஷை சாத்தானிட மிருந்தும், உண்மையான அந்நிய பாஷையை தேவனிடத்தி லிருந்து பெறுகிருேமென்று அந்நிய பாஷைகள்தான் அடை யாளம் என்னும் மக்கள் ஒப்புக்கொள்கின்றனர். ஆகவே என்னுடைய கேள்வி என்னவெனில் ''எது உண்மையானது என்று யார் அறிவார்? பேசப்பட்டது என்ன என்று அறிந்து கொள்ள பாஷையை புரிந்துகொண்டது யார்? தவருன அந்நிய பாஷையைக் கண்டுபிடிக்க யாரிடத்தில் பகுத்தறிவின் வரமுண்டு?'' இப்பொ ழுது நாம் இந்த பதில்களைப் பெற்றுக்கொள்ளும்போது நாம் தொடர்ந்து செல்ல ஏதோ ஒன்றிருக்கும். ஆனுல் அதுவரை அந்த அந்நிய பாஷைகளின் துவக்கம் என்ன என்பதைக் குறித்து நாம் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும். அந்நிய பாஷை பேசுதலின் அடையாளத்தை நீங்கள் ஆதரித்து என்ன கூறுப்பட்டது என்பதை அறியாதிருப்பீர்பளானுல் முடிவாக நீங்கள் எல்லா அந்நிய பாஷைகளும் தேவனுலுண்டானது என்ற இடத்திற்கு வந்துவிடுவீர்கள் என்பதை நீங்கள் இப்பொழுது சரியாக காணலாம். அது, பிசாசினுல் அந்நிய பாஷை பேசமுடியாது என்பதை நாம் நம்பும்படிக்கு நம்மைக் கொண்டு சென்றுவிடும். அது அப்படியல்ல; இல்லை, ஒரு நிமிடத்திற்கு கூட அல்ல. நான் அனுபவரீதியாக அறிந்திருப்பதைப் போலவே, வெளிநாட்டு களங்களில் இருக்கின்ற எந்த ஒரு உண்மையான மிஷனரியும் பிசாசுகள் கூட அந்நிய பாஷைகளில் பேசும் என்பதை மிகவுமாக அறிந்திருக்கிருர்.

பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெறும்போது, அந்நிய பாஷை பேசவேண்டும் என்று வேதம் கூறவில்லை என்பதை பெந்தெகொஸ்தே வேத பண்டிதர்களும் ஒப்புக் கொள்கின்றனர். அப்போஸ்தலர் காலத்தில், மக்கள் ஐந்து முறை பரிசுத்த ஆவியி னுல் நிரப்பப்பட்டபோது, மூன்று முறை அந்நிய பாஷை பேசினர்



இருந்து இதைக் கவனியுங்கள். தேவனிடமிருந்து நித்தியமாக ஒரு நபர் முன்குறிக்கப் பட்டவனுக வருவதல்ல, **அது அந்த வார்த்தை அல்லது வித்தாகும்**. அதுவேதான். ஒரு மனிதனின் தோற்றம் தேவனுடைய சிந்தையில் முன் குறிக்கப்படுகிறது. மனித ஞானம் கிரகித்துக் கொள்ளமுடியாத முன் காலங்களில், நித்திய சிந்தையைக் கொண்ட நித்திய தேவன் ''**பிள்ளைகள் இன்னும் பிறவாமலும், நல்வினை தீவினை ஒன்றும் செய்யாமலிருக்கையில், யாக்கோபைச் சிநேகித்து ஏசாவை வெறுத்தேன்**'' என்று தீர்மானித்தார். இது தேவனுடைய **சிந்தனையேயன்றி** வேறென்று மில்லை. பிறகு அந்த சிந்தனை வெளிப்பட்டது. ஏசாவும், யாக்கோபும் தோன்றி, யாக்கோபு தேவனுடைய தீர்மானத்தின்படி மீட்கப்பட்டான். யாக்கோபு மட்டுமே **வித்தாயிருந்தான்**. யாக்கோபு தேவனின் சந்ததியாயிருந்தபடியால், அவனுடைய புத்திர பாகத்தையும், அவன் தேவனேடு செய்த உடன்படிக்கையையும் கௌரவித்தான். நீங்களும் உண்மையான வித்தாயிருந்தால், தேவனுடைய வார்த்தையைக் கேட்பீர்கள்; அப்பொழுது ஆவியானவர் உங்களைக் கிறிஸ்துவின் சரீரத்துக்குள் ஞானஸ் நானம் பண்ணி, உங்களை நிறைத்து, வல்லமைப் படுத்துவார். உங்களுடைய காலத்துக்குரிய சத்தியத்தை நீங்கள் ஏற்றுக்கொள் வீர்கள். வார்த்தையானது உங்களுக்கு வெளிப்படுத்தப் படும்பொழுது உண்மையான அத்தாட்சி என்பது தெளிவாகின்றது மறுபடியும், கவனியுங்கள், இயேசு கிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்ட ராஜரீக சந்ததியாவார் (Royal Seed). அவர் ஒரு மானிட சரீரத்தில் ஜீவித்தார். ஆவியானவர் உரைத்ததைக் (வார்த்தையை பிரத்தியட்சமான சிந்தை) கேட்டு, யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்ருர். வார்த்தைக்குக் கீழ்ப்படிந்த வுடனே, பரிசுத்த ஆவி அவர் மேல் இறங்கி, பின்னர் ''இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்'' என்னும் சத்தமுண்டாயிற்று. 'இவர் என்னுடைய குமாரனுகி

கிறிஸ்துவின் ஆவியினால் மறுபிறப்பு அடைந்து, பின்பு பரிசுத்த ஆவியினால் வல்லமையைப் பெறுகிறோம் என்று சிலர் நினைப்பது முற்றிலும் தவறாகும். அது உண்மையாயின், நம்முடைய இரட்சிப்பில் பிதாவுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், அவரை அவமதிக்கிறவர்களாயிருப்போம். இரட்சிப்பு கர்த்தருடையது என்று வேதம் போதிக்கிறது. மூன்று கடவுள்கள் இருப்பார்களாயின், **பிதாவுக்கும்** அதில் பங்கிருக்கவேண்டும், இயேசு கிறிஸ்துவே தேவனென்றும் **அவரே** விசுவாசிக்குள் வாசம் செய்கிறாரென்றும் வேதம் தெளிவாகக் கூறுகிறது. பிதா வேறொரு தேற்றரவாளனை அனுப்புவாரென்று இயேசு கூறினார் (யோவான் 14:16). **அவர்** (இயேசு) அவர்களோடு வாசம் பண்ணி, பின்பு **அவர்களுக்குள்** இருப்பாரென்று 17-ம் வசனம் கூறுகிறது. 18-ம் வசனத்தில், அவரே அவர்களிடத்தில் வருவதாக உரைக்கிறார். பின்னர் சீஷர்களிடத்தில் (23-ம் வசனம்), ''நாங்கள் (பிதாவும், குமாரனும்) அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்'' என்று அவர் கூறுகிறார். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி எல்லாரும் ஒரே நேரத்தில் வருகிறார்கள்; ஏனெனில் தேவத்தவத்தில் **அது ஒரேயொரு நபராகும்**. பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி இறங்கினது. ஆவி இருமுறை வந்து மக்களை அபிஷேகிப்பதில்லை. அநேகர் சத்தியத்தை அறியாதவர்களாய், பாவமன்னிப்புக்கென்று இயேசுவை விசுவாசித்து அதோடு நின்றுவிடுகின்றனர். அவர்கள் தொடர்ந்து பரிசுத்த ஆவியைப் பெறுவதில்லை.

இந்த பொருளைக் குறித்து நான் முடிக்கு முன்பு, உங்கள் மனதில் ஒரு கேள்வி இருக்கிறதென்று நான் அறிவேன். ஆத்துமாக்கள் தொடக்கத்திலிருந்து ஜீவனோடிருக்கின்றன (Preexistence of souls) என்னும் மார்மோனின் கொள்கையை நான் நம்புவதாக நீங்கள் எண்ணவேண்டாம். இதைக் குறித்தும், மறுஜென்மம் எடுப்பதைக் குறித்தும் எனக்கு நம்பிக்கையில்லை. ஜாக்கிரதையாக



என்று அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகத்தில் குறித்திருக்கிறபடியால், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கு அந்நிய பாஷை அடையாளமாயிருக்கிறது என்று அவர்கள் ஊகிக்கின்றனர். இரண்டுவிதமான அந்நிய பாஷைகளுண்டென்றும், அவைகளிலொன்று பரிசுத்த ஆவியைப் பெறும்போது பேசப்படுகிறதென்றும் அதுதான் 'அடையாளமென்றும்', மற்றது விசுவாசிக்கும்போது அந்நியபாஷையின் வரம் பெற்று அடிக்கடி பேசப்படுமென்றும், வேதத்தின் ஆதாரமின்றி இவர்கள் கூறுகின்றனர். அல்லாமலும், அவர்கள் ஆவியைப் பெற்றுக் கொண்டோம் என்பதன் அடையாளமாக ஒரு தடவை பேசிவிட்டு, மறுபடியுமாக நீங்கள் பேச வேண்டிய அவசியம் இல்லை என்று கூறுகின்றனர். இன்னும் ஒரு முறை வேதத்தில் இதற்கு சான்று இருக்கிறதா என்று பார்க்க நாம் ஆவலாக இருக்கிறோம். அது அங்கே இல்லையெனில், தேவன் அதைப் பேசவில்லை என்பதாகும். தேவனுடைய அந்த வார்த்தையோடு எதையாகிலும் கூட்டும் மனுஷனுக்கு ஐயோ! ஆனால் அவர்கள் முழுமையாக அசட்டை பண்ணுகிற, இந்த அதே காரியத்தகுறித்து வார்த்தையில் ஏதோ ஒன்று அங்கே இருக்கிறது. மனுஷர் பாஷை, தூதர் பாஷை உண்டென்று 1கொரி 13ம் அதிகாரம் கூறுகிறது. மனுஷர் பாஷை எல்லாரும் புரிந்து கொள்ளும் பாஷையாகும். அறியாத அல்லது தூதர் பாஷையை யாரும் புரிந்துகொள்ள முடியாது. தூதர் பாஷையைப் பேசி பரிசுத்த ஆவியைப் பெறுவதாக நவீன பெந்தெகொஸ்தேகாரர் கூறுகின்றனர், அவர்கள் குதிரைக்கு முன்பாக பாரம் இழுக்கும் இரு சக்கர வண்டியை வைக்கின்றனர். பரிசுத்த ஆவியைப் பெற்ற மக்கள், அவிசுவாசிகளும் கேட்டு புரிந்து கொள்ளும் பாஷையில் பேசினரென்று அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகத்தில் (2ம் அதிகாரம்) எழுதப்பட்டிருக்கிறது.

இப்பொழுது தேவன் அமைதியாக இருப்பாரென்றால் நாமும் அமைதியாக இருப்பது நல்லது. ஆனால் அவர் எங்கே

பேசியிருக்கின்றாரோ அதை நாமும்பேசுவது நல்லதாயிற்றே, அவர் ஏற்கனவே கூறியிருப்பதை கூறுங்கள். அடையாளத்தை நமக்கு கூறியிருக்கிறார், அல்லது பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்ட பிறகு என்ன சம்பவிக்குமென்றால், எல்லா சத்தியத்தையும் போதிக்கின்ற அந்த போதகரை நாம் கொண்டிருப் போம். இவர் **உள்ளே** வாசம் செய்யும் போதகர்; வெளிப்புறமாகக் காணும் போதகரல்ல. பரிசுத்த ஆவி உள்ளே வாசம் செய்யா விட்டால், சத்தியத்தை நாம் தினந்தோறும் கேட்டாலும் அதன் வெளிப்பாடுகளைப் பெறாததனால், நாம் அதை ஏற்றுக் கொள்ள முடியாது. பவுலின் நாட்களிலும், சத்தியத்தை ஏற்றுக் கொள்வதே ஆவியானவர் உள்ளே வாசம் செய்ததன் அடையாளமாயிருந்தது. பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டவர்கள் வார்த்தையைக் கேட்டு, அதைப் பெற்றுக்கொண்டு அதனால் ஜீவித்தனர். ஆவியைப் பெறாதவர்கள், மாம்ச சிந்தையுள்ளவர்களாக சத்தியத்தைக் கேட்டு, அதற்குத் தவறான அர்த்தம் கொடுத்து, பாவத்தில் பிரவேசித்தனர்.

ஒவ்வொரு காலத்திலும், (உண்மையான விசுவாசிக்கு ஒவ்வொரு காலமும் பரிசுத்த ஆவியின் காலமாகும்) —— நான் கூறுகிறேன், ஒவ்வொரு காலத்திலும் அடையாளம் அதே விதமாகத்தான் இருக்கிறது. ஆவியை, அந்த போதகரை கொண்டிருந்தவர்கள் வார்த்தையைக் கேட்டனர், அவர்களுக்குள் இருந்த அந்த ஆவி வார்த்தையை எடுத்து அதை அவர்களுக்கு போதித்தது (அதை வெளிப்படுத்தியது); அவர்கள் அந்த செய்தி யாளனையும் அவனுடைய செய்தியையும் கேட்டு, அதை எடுத்து அதை ஜீவித்த அந்த குழுவைச் சேர்ந்தவராவர்.

பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் இறங்கின போதும், கொர்நேலியு வீட்டில் புறஜாதிகள் பரிசுத்த ஆவியைப் பெற்ற நாளில் மக்கள் அந்நிய பாஷையில் பேசினதால், அதுவே



அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனா யிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்து மூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்'' *(கலா.4:4-7)*. ஆம், இயேசு கிறிஸ்து தோன்றி, சிலுவையில் மரித்து மரணத்தின் மூலம், (கிரயத்திற்கு கொள்ளுதலின் மூலம் அல்லது வாங்குதலின் மூலம் மூல சொந்த காரரிடத்திற்கு திரும்பக் கொண்டு செல்லுதல்) ***அவருடைய புத்திரராகிய நம்மை மீட்டுக்கொண்டார். நம்மைப் புத்திரராக அவர் ஆக்கிக் கொள்ளவில்லை. ஏனெனில் நாம் தொடக்கத் திலிருந்தே புத்திராயிருக்கிறோம். புத்திர ஸ்தானத்தை அவர் நமக்கு மீண்டும் அளித்தார். மாமசத்திலிருந்த போது, நாம் அவருடைய புத்திர ரென்று அறிந்து கொள்ளவில்லை. பிசாசினால் நாம் அடிமைப்படுத்தப் பட்டோம். என்றாலும் நாம் அவர் புத்திரர்,*** **''மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்.''** பெந்தெகொஸ்தே நாளன்று அவருடைய புத்திரரின் மேல் பரிசுத்த ஆவி இறங்கினது. கொரிந்து பட்டணத்திலும் **வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்த** அவருடைய புத்திரரின்மேல் பரிசுத்த ஆவி இறங்கினது.

அப்படியெனில், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்றால் என்ன? பரிசுத்த ஆவி நம்மைக் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பண்ணுவதே, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் அர்த்தம். இதுதான் மறுபிறப்பு. நாம் வசனத்தைக் கேட்டு, மனந் திரும்பி, தேவனைப் பற்றும் நல் மனச்சாட்சியின் உடன்படிக் கையைத் தண்ணீரில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத் தினால் ஞானஸ்நானம் பெற்று நிறைவேற்றிய பிறகு, பரிசுத்த ஆவி நம்மை நிரப்பி, மறுபிறப்பின் அனுபவத்தைக் கொடுக்கிறது.

தேவன் ஒருவரே என்னும் சத்தியத்தை எல்லாரும் விசுவாசித்தால், நான் இதுவரை கூறியது சுலபமாக விளங்கும். தெய்வத்துவத்தில் மூன்று ஆட்களில்லை. தேவன் **ஒருவரே**. நாம்

என்றாலும் ஒருவாறு தீனியைப் பொறுக்கிற்று. ஆனால் ஒரு நாள் தாய் கழுகு ஆகாயத்தில் பறந்து கொண்டிருக்கும்போது, கழுகுக் குஞ்சை கண்டுவிட்டது. அது அதிவேகமாய்த் தாழ வந்து, சத்தம் போட்டு, தன்னிடத்தில் பறந்துவர கழுகுக் குஞ்சை அழைத்தது. இதுவரை கழுகின் சத்தத்தைக் கேட்காத கழுகுக் குஞ்சு, முதன் முறையாக அதைக் கேட்டபோது, ஒருவித உணர்ச்சி அதற்குத் தோன்றி, தாய்க் கழுகிடம் பறந்துசெல்ல வாஞ்சை கொண்டது; என்றாலும் பறக்க முயற்சி செய்ய பயந்தது. மறுபடியும் தாய்க் கழுகு சத்தம்போட்டு அழைத்தது. அப்பொழுது கழுகுக் குஞ்சு சத்தம்போட்டு பயத்தைத் தெரிவித்தது. தாய்க் கழுகு தொடர்ந்து சத்தமிட, தாயின் சத்தத்தைக் கேட்டு கழுகுக் குஞ்சு ஆகாயத்தில் பறந்து சென்றது. கழுகுக்குஞ்சு எப்பொழுதுமே கழுகுக் குஞ்சாயிருந்தது. கோழிக்குஞ்சைப் போன்று சிறிது காலம் பாவனை செய்தாலும், அதற்குத் திருப்தியில்லை. தாய்க் கழுகின் சத்தம் கேட்டவுடனே, அதற்குரிய இடத்திற்குப் பறந்து சென்றது. அவ்வாறே, உண்மையான தேவகுமாரன், வார்த்தையின் மூலம் ஆவியானவரின் சத்தத்தைக் கேட்கும்போது, அவன் யாரென்பதை உணர்ந்து, மகத்தான தீர்க்கதரிசி கழுகினிடத்தில் பறந்துசென்று, அவரோடு சதா காலங்களிலும் கிறிஸ்து இயேசுவுக்குள் உன்னதங்களில் வீற்றிருப்பான்.

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைக் குறித்ததான **நம்முடைய வெற்றிசிறந்த தலைக்கல் இப்பொழுது வருகின்றது**. ‘‘நாம் புத்திர சுவீகாரத் தையடையும்படி நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் நியாயப் பிரமாணத்திற்குக்கீழான வருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார். மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில்



பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் அடையாளமென்று நினைக்க வழியுண்டு. ஆனால் இவ்விருசமயங்களிலும், அவர்கள் பேசின அந்நிய பாஷைகளைக் கூடியிருந்த மக்கள் புரிந்து கொண்டனர். இது நவீன பெந்தெகொஸ்தே கூட்டங்களில் காணப்படும் பாபேலின் குழப்பத்தினின்று வித்தியாசப்பட்டது. இப்படிப்பட்ட ஒரு சிந்தனையை நாம் விட்டுவிட வேண்டுமென்று நம்மை உந்தித்தள்ள இது போதுமானதாக இல்லையென்றாலும், அந்நிய பாஷையில் பேசியிராத மக்கள் தங்கள் வாழ்க்கையில், வார்த்தையின் ஞானம், ஆவிகளைப் பகுத்தறிதல், வார்த்தைக் குறித்த அறிவு, விசுவாசம், சுகமளித்தல் மற்றும் அற்புதங்கள் போன்ற இன்னும் மற்ற எட்டு வரங்களையும் கொண்டிருக்கின்றனரே என்னும் கூற்றை நம்மிடம் கொண்டு வந்தால் எப்படியிருக்கும்? ஆவிக்குரிய வரங்கள் ஒன்பதிலும், அந்நிய பாஷை பேசுவது மிகவும் குறைந்த வரமாகும் என்பதை வைத்துக் பார்த்தால் இந்த கருத்தானது மிகவும் ஆவலை உண்டு பண்ணுகிற ஒன்றாக உள்ளதே; ஆகவே நாம் அந்நிய பாஷையில் பேசாத மக்கள், அல்லது அந்நிய பாஷையில் பேசியிராத மக்கள், அந்நிய பாஷையில் பேசுகின்ற மக்களைக் காட்டிலும் மகத்தான வரங்களை உபயோகிக்கின்றதைக் காண்கையில் இப்படிப்பட்ட ஒரு போதகத்தை முன்பிருந்ததை விட இன்னும் அதிகமான விதத்தில் நாம் நிராகரிக்க வேண்டும். இதைக் காட்டிலும் மேலான வரங்களைப் பெற்றவர்களை நாம் நன்றாக அறிந்திருப்பதால், பெந்தெகொஸ்தேகாரரின் போதனையை நாம் முற்றிலும் நிராகரிக்க வேண்டும்.

வேதம் கூறாத எதையும் நாம் கூறுவது தவறாகும். பரிசுத்த ஆவியானவரின் கிரியையானது, மற்றும் **அந்த ஸ்தோத்தரிக்கப் பட்ட நபரின்** வெளிப்படுத்தலானது ஒவ்வொரு காலத்தின் சத்தியத்தை அந்த காலத்தின் உண்மையான வித்திற்கு கொண்டு வரும் என்று

வேதாகமம் நமக்கு போதித்திருக்கையில், அப்படியானுல் அந்த ஆவியானது அந்த நபருக்குள் வாசம் செய்ய வேண்டும் அல்லவென்ருல் அவனுல் அந்த நேரத்தின் சத்தியத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. ஆமென். அது முற்றிலும் சரியானதாகும். ஆகவே இந்த காலங்கள் ஏதாவதொன்றை வெளி கொணரு மென்ருல், அவைகள் நிச்சயமாக இந்த சத்தியத்தை வெளியே கொண்டுவரும், அதை வெளிப்படுத்தும்

நாம் இந்த பொருளின் பேரில் கடந்து செல்வதற்கு முன் வார்த்தையின்படி பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்பது என்ன என்று நான் தெளிவாக்க விரும்புகிறேன். அது என்னைப் பொறுத்த வரையில் அல்ல, மற்றும் உங்களைப் பொறுத்தவரை அல்ல. அது ''கர்த்தர் உரைக்கிறதாவது'' என்பதின்படிதான் இருக்கவேண்டும், இல்லையேல் நாம் தவருக நடத்தப்படுகிருேம். ஆமென்.

